# அதானே கேட்குறேன் அம்புஜம்!

அமிர்தமும் அம்புஜமும் உடன் பிறந்தவர்கள். இவர்களுக்கு, கஜேந்திரன், நரேந்திரன் எனும் தம்பிகளும், ஜானகி என்னும் அக்காவும் உண்டு. மூவரும் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர்கள். தம்பிகள் இருவரும் நன்கு படித்துவிட்டு கல்லூரியில், விரிவுரையாளர்களாய் பணி புரிகின்றனர். அக்காவின் கணவர், தாசில்தாராக இருந்து பணி ஓய்வு கண்டவர். மற்ற இருவரின் கணவர்களும் பள்ளி ஆசிரியர்கள். மூத்தவர் பணிநிறைவு காண, அடுத்தவர், அடுத்த கல்வியாண்டு முடியும் தருவாயில், ஓய்வு பெறுவார்.

எப்போதும், அமிர்தமும் அம்புஜமும் மட்டும் அதிகம் பேசிக்கொள்வர். மொபைல் எனப்படும் அலைபேசியின் பயன் பாட்டை, அதிகம் கொள்பவர்கள் அமிர்தமும் அம்புஜமும் மாய்த்தான். இருக்கும். அமிர்தத்துக்கு எப்போதும், அக்கப் போர் அதிகம். யாரையாவது பற்றி ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றி பேசிக் கொண்டே இருப்பாள். பிடிக்க வில்லை யெனில், சகட்டு மேனிக்கு குறை சொல்வாள்.

ஜானகிக்கு இந்த அக்கப் போர் விஷயமெல்லாம் பிடிக்காது. அமிர்தம் பேசுவதை ஓரளவுக்கு மேல் கேட்க மாட்டாள். ஆகையால், அமிர்தத்துக் பிடித்தது, தங்கை அம்புஜம்தான். அம்புஜத்துக்கு என்னவோ, அமிர்தத்திடம் ஒருவித பயம். அவள் கூறுவதை முற்றிலும் கேட்பாள். தனக்கு பிடிக்கிறதோ இல்லையோ, அக்காவுக்கு அடங்கிப் போவது போல் ஆமாம் போடுவாள். தம்பிகள், கஜேந்திரன், நரேந்திரன் மீதான, குற்றச்சாட்டுகளுக்கு, அமிர்தத்துக்கு கை கொடுப்பது என்னவோ ஜானகிதான். அப்போது மட்டும் ஜானகிக்கு தங்கையின் பேச்சு மிகவும் பிடிக்கும்.

அக்கா அமிர்தம் பேசும்போது, அது, இரண்டு மணி நேரமோ, ஒரு மணி நேரமோ, அம்புஜத்தின் வாய் பதில் தருவது எப்போதாவது தான். மற்றபடி, ஆமாம் மட்டுமே போடுவாள். அதுவும் அவள் பெரும்பாலும் பேசுவது, ***அதானே கேட்கிறேன்*** என்பதாய்த்தான் இருக்கும். இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது, வீட்டில் உள்ளவர்கள் ஏதும், அவசரத்துக்கு அம்புஜத்தைக் கேட்டால் அவ்வளவுதான். இவள் இங்கே பதில் தந்தால், அவள் அங்கே போனை கட் செய்து விடுவாள். அம்புஜம், தன்னையும் தன் வீட்டாரையும் அக்காள் அவமானப் படுத்தியதாய் கருத மாட்டாள். அக்காள் அமிர்தத்தின் செயலுக்காய் வீட்டில் உள்ளவர்களைத் திட்டுவாள். ஏதோ தெய்வத்திடம் பேசும்போது, இடைபுகுந்து விட்டதாய், கடிந்து கொள்வாள். திட்டியும் தீர்ப்பாள். கணவன் கேட்பான், அக்காள் என்ன கடவுளா என்று. உங்களுக்கு அதெல்லாம் தெரியாது எனச் சோல்லி விடுவாள். அக்காள் ஜானகியுடன் பேசும் போது, இந்த தொல்லை யில்லை. அவள் அதிக நேரம் பேச மாட்டாள், இடையில் பேசினாள், கோபித்தது போல், போனை கட் செய்ய மாட்டாள். பேசும்போது, ஆமாம் போட்டு, ஆர்வம் காட்டாததால், அமிர்தமும் அக்காள் ஜானகியை விரும்புவதில்லை. தங்கை அம்புஜத்தை மட்டுமே துளைத்தெடுப்பாள். ஏதேனும், கதைகள், மற்றவர் மீதான அங்கலாய்ப்புகள்.

<u>அதானே கேட்குறேன்</u> என அம்புஜம் பதில் தந்தால், யார் தலையோ உருட்டப் படுகிறது எனப் புரிந்து கொள்ள வேண்டும். அமிர்தத்தின் கூற்றை அம்புஜம் ஒப்புதல் செய்கிறாள் எனப் பொருள். அமிர்தத்தின் பேச்சில் ஏதோ ஒரு வகையில் பொறாமை பொதிந்துதான் இருக்கும். அது புரிந்தாலும், அம்புஜம் காட்டிக்கொள்ள மாட்டாள். அம்புஜத்துக்கு அமிர்தத்திடம் ஏதோ ஒரு வகையில் பயம்

இருந்தது. அக்காள் ஜானகி யதார்த்த வாதி என்பதால், அவளைப் பற்றி, அம்புஜம் அலட்டிக் கொள்ள மாட்டாள். அம்புஜமும் ஜானகியும் பேசும் போது, வீடு, குடும்பம் பிள்ளைகள் கல்வி என்பதாகத்தான் இருக்கும். அமிர்தத்தின் செயல் ஜானகிக்கும் பிடிக்காது எனினும், அதை பற்றியெல்லாம் அம்புஜத்திடம் கேட்க மாட்டாள்.

மூவரின் வாழ்க்கையிலே, அமிர்தத்தின் வாழ்க்கைதான், மிகவும் சிறப்பானது. ஆனால், அம்புஜத்திடம் பேசும்போது, நாம மட்டும்தான் கஷ்டப் படுறோம், என ஏதாவது, சொல்லி, அம்புஜத்தை உசுப்பேத்தி விடுவாள். அம்புஜத்தின் மனம் கலவரப்படும். தம்பிகள் இளையர் ஆனதால், கொஞ்சம் தொல்லை இருக்கத்தான் செய்கிறது. உனக்கும் கீழே உள்ளவர் கோடி எனும் கண்ணதாசன் பாடலை கேட்டிருந்தாலும், அமிர்தம் தான் மட்டுமே கஷ்டப்படுவதாய் அங்கலாய்ப்பாள். யதார்த்தமான குடும்பச் சூழல்களையெல்லாம், அம்புஜத்திடம், நாம் தான் துன்பம் அனுபவிக்கிறோம் எனக் கூறி தூபமிட்டு விடுவாள். அது வீட்டினுள் புகையத்தானே செய்யும். அமிர்தம் அக்காள் எவ்வளவு சரியாச் சொல்கிறாள் பாருங்கள், நாங்கதான், உயிரை விடுகிறோம் என்பாள் கணவனிடம். அவன் ஏதேனும் பதில் சொன்னால், அதிலிருந்து, சண்டை பிடிப்பாள் அம்புஜம், மவுனமாகச் சென்றாலும் ஏன் அடைத்து போய் விட்டது. அக்காளிடம் பேசியது பிடிக்கவில்லையா? அக்காளும் சொல்றா, அவரும் அப்படித்தானாம் என்பாள்.

என்றைக்காவது, நகைச்சுவையாக, உங்க அக்கா அமிர்தம் நாமதான் கஷ்டப் படுறோம்னு சொல்லுவா, நீ அதான கேட்கிறேன்னு சொல்லுவ. அக்கா யார் தலையையாவது உருட்ட, நீ ஆமாம் போட்டு, அதான கேட்குறேன்னு சொல்லு என்று, அவள் கணவன் சொன்னால், அவ்வளவுதான், அவளப் பத்தி பேச நீங்க யாரு, என ஈரக் குலை நடுங்கும் அளவுக்கு கத்துவாள் அம்புஜம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், மூவரிலே கொஞ்சம் தெளிவான சிந்தனை கொண்டவள் அம்புஜம். அக்காள் அமிர்தத்திடம் இருப்பது, அம்புஜத்துக்கு பக்தியா பயமா எதுவென்று தெரியவில்லை. ஆனால், அமிர்தத்துக்கு அவள், அதானே கேட்குறேன் அம்புஜம்.

கவிஞர் **கவிவளவன்** 03-03-2022 (11.30 PM)